யாழ்ப்பாணம்


# வலம்புரி

பக்கங்கள் ஆறு

விலை
ரூபா
5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 தை 23 திங்கட்கிழமை ( 07 - 02 - 2000 ) VALAMPURI ஒலி: 50


★ அம்பாறை தவிர்ந்த

## வட - கிழக்கு இணைப்பை வலியுறுத்தி ஜனாதிபதியுடன் பேச த. வி. கூ. முடிவு

(கொழும்பு)

திம்பு பேச்சுவார்த்தையின் அடிப்படையில் அம்பாறை மாவட்டம் தவிர்ந்த ஏனைய வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பை வலியுறுத்தி சுயாட்சி உரிமை பெற்றவர்களை சமஷ்டி ஆட்சியை வலியுறுத்தி ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சிப்பணிமனையில் திரு. வே. ஆனந்தசங்சரி தலைமையில் நேற்று நடைபெற்ற போதே பேற் கண்டவாறு தீர்மானிக்கப்பட்டு அதன் அடிப்படையில் சந்திரிகாவுடன் பேசுகையில்:

இக் கூட்டத்தில் திருமலை மாவட்ட எம்.பியும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலளாருமான இரா. சம்பந்தன் மட்டு.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 178 பயணிகளுடன் பயணம் செய்த ஆப்கான் விமானம் கடத்தப்பட்டது

[காபூல்]

ஆப்கானிஸ்தான் ஹரியானா எயர்லைன்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான போயிங் 727 என்ற விமானம் 178 பயணிகளுடன் கடத்தப்பட்டுள்ளது.

இவ்விமானம் கஜகஸ்தானின் வடபகுதியிலுள்ள அக்னியோக் என்ற நகரில் தரையிறங்கியுள்ளது. இதற்கு முன்னர் இவ் விமானம் உஸ்ரிகிஸ்தானின் தலைநகரம் காஸ்சென்ரில் தரையிறங்கி சிறிது நேரம் தரித்திருந்த போது பெண்கள் குழந்தைகள் உட்பட 10 பயணிகள் இறக்கப்பட்டனர்,

இதேவேளை அண்மையில் மூன்று தீவிரவாதிகளின் விடுதலைக்காக இந்தியன் எயர்லைன்ஸ் விமானம் பாகிஸ்தான் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(வ-4)

★ வவுனியா சிதம்பரபுரத்தில்

# 10 ஆயிரம் பேர் வரை தங்க வைக்கும் புதிய அகதிமுகாம் அமைக்க ஏற்பாடு!

## சிவில் நிர்வாக வட்டாரங்கள் தகவல்

(வவுனியா விசேட செய்தியாளர்)

சுமார் பத்தாயிரம் பேர் வரை தங்கவைக்கக் கூடிய மிகப் பாரிய அகதி முகாமொன்று வவுனியா சிதம்பரபுரத்தில் அமைக்கப் படவுள்ளது.

இம்முகாமில் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிகளில் இருந்து வவுனியா வரும் அகதிகள் தங்கவைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக வவுனியா சிவில் நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவக் கட்டுப் வத்தினரால் விடுவிக்கப்பட்ட நிர்வாக அலுவலர்களுக்குத்

## த. வி. கூ. மத்திய குழு தீர்மானங்கள்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு.

★ மட்டக்களப்பில் பாஸ் நடைமுறைப்படுத்துவதை நிறுத்தவேண்டும். நிறுத்தாவிடில் போராட்டம் நடாத்துவது,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணி மத்திய செயற்குழுக் கூட்டம் மட்டு. எம்.பி. யோசப் கலந்துகொள்ளவில்லை

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்

பொதுத்தேசியபட்டியல் எம். பி. மாவை சேனாதிரசா, மட்டக்களப்பு எம். பி. யோசப்

தெரிவித்துள்ளன.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பிரதேசத்தில் இருந்து முதல் தொகுதியாக 10 ஆயிரம் அகதிகள் கட்டம் கட்டமாக இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட வவுனியாவிற்கு வரவுள்ளனர்

இதுதொடர்பாகபாதுகாப்புப் படை சிரேஷ்ட உயர் அதிகாரிகள் வவுனியா சிவில் நிர்வாக அலுவலர்களுக்குத் தெரியப்படுத்தியதை அடுத்தே இம் முகாம் அமைக்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இந்தப்பாரிய அகதி முகாம் அமைக்கப்படுவதற்கான நிதி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களத்திடம் இருந்து பெறப்படவுள்ளது.

இதேவேளை ஏற்கனவே வவுனியா சிதம்பரபுரத்தில் உள்ள பொலிஸ் முகாம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மீனவர்களின் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு "ரெலோ" அமைப்பும் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

அன்றாட சீவியத்திற்காக கடற்தொழிலையே நம்பியிருக்கும் மீனவர்களின் ஜீவாதாரக் கோரிக்கைகளான ''மீன்பிடித்தடையை முற்றாகத் தளர்த்துதல், ஏற்கனவே கடலில் போடப்பட்டுள்ள பல லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களை மீளக் கரைக்கு எடுத்தல், சுதந்திரமாக மீன் பிடிக்க அனுமதித்தல்'' போன்றவற்றை அரசு நிறைவேற்றத் தவறியதை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# 15 ஆயிரம்பேர் இராணுவத்திற்கு சேர்ப்பு ஐக்கியதேசியக்கட்சி ஒத்துழைக்க வேண்டும்

## இராணுவத் தளபதி லால் வீரசூரியா

(கொழும்பு)

இலங்கை இராணுவத்திற்கு மேலும் 15 ஆயிரம் பேரை சேர்த்துக்கொள்ளும் திட்டத்தின் பிரகாரம் 5 வாரங்களுக்கு தொடர்ந்து ஆட்சேர்ப்பு நடைபெறவுள்ளது என ராணுவத்தளபதி லால் வீரசூரியா அறிவித்துள்ளார்.

இத்தகைய ஆட்சேர்ப்புக்கு ஐக்கிய தேசியக்கட்சி ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென இராணுவத்தளபதி அக் கட்சியினரைக் கேட்டுக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று கொழும்பிலுள்ள கட்சிப் பணிமனையில் நடைபெற்ற பொதுத்தேசியபட்டியல் எம். பி. மாவை சேனாதிரசா, மட்டக்களப்பு எம். பி. யோசப் பரராசசிங்கம் ஆகிய இருவரும் கலந்துகொள்ள

[6ஆம் பக்கம் பார்க்க]

# மட்டக்களப்பு ஐ. தே. க. கொத்தணி அமைப்பாளர் மூவர் கைதுசெய்யப்பட்டனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி கொந்தணி அமைப்பாளர் மூவர் கொழும்பில் இருந்து வந்த குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பொலிஸாரினால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத் தப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட

(6ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் குண்டு வெடிப்புச் சம்பவங்கள்

# சாரதியும், நடத்துநருமே பொறுப்பு

# புதிய பொலிஸ் குழு நியமிக்கப்படும்

## பிரதிப்பொலிஸ்மா அதிபர் கொட்டகதெனியா

(கொழும்பு)

பொதுமக்கள் பிரயாணம் செய்யும் பஸ்வண்டிகளில் இடம்பெறும் குண்டுவெடிப்புகளைத்தடுக்க புதியபொலிஸ் குழு ஒன்று நியமிப்பதற்கு பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துவைத்துள்ளதாக குற்றத்தடுப்புப் பிரிவு புலனாய்வு பிரதிப் பொலிஸ்மா அதிபர் கொட்டகதெனிய வலம்புரிக்கு தெரிவித்துள்ளார்.

புதியபொலிஸ் குழுநியமிப்பது தொடர்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் கொட்டகதெனிய மேலும் தகவல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்


**டிப்ளோமா வினாவிடை**

தேசிய கல்வி நிறுவனத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியினர்க்கான கடந்த கால வினா விடைத் தொகுப்பு விற்பனையாகின்றது.
சாயி தொலைத் தொடர்பகம் (கல்வியங்காடு சந்தை முன்பாக T.P. 021-2871) (00149)


## கும்பாபிஷேகம்

(இளவாலை)

சண்டிலிப்பாய் அருள்மிகு ஆவளைப்பிள்ளையார் ஆலய புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் 8 மணி வரை இடம்பெறவுள்ளது. (க-12)

## கலைக்குழுக்கள் அமைத்தல்

(வடமாரட்சி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராம சேவகர் பிரிவுதோறும் கலைக் குழுக்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

மேற்படி பிரிவில் வதியும் கலைஞர்களைக் கௌரவிக்கும் முகமாகவும் பாரம்பரிய கலைகளைப் பேணி வளர்க்கும் நோக்குடனும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளையின் வேண்டுகோளின்படி மேற்படி பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (க)


ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
அர்ஜுன், மனுஷா கொய்ரலா, ரகுவரன் நடித்த
முதல்வன்
(CD பிரதி)
4 நாட்கள் மட்டும்
(சிறந்த குடும்பச் சித்திரம்)
காட்சிகள்
10. 30, 2. 30 (ப.நே)
(00115)

நாகம்ஸ்
சுன்னாகம்
சரத்குமார்
தேவயாணியின்
சூரிய வம்சம்
(ரீல்ஸ்)
11:00-2:30 (பு.நே)
(00116)


நாடளாவியரீதியில்

# புதிய கண்டுபிடிப்பாளருக்கான ஆய்வு மையம் விரைவில் செயற்படும்

(அச்சுவேலி)

புதியஇளம் கண்டுபிடிப்பாளர்களை இனங்கண்டு ஊக்குவிக்கும் வகையிலான புதிய திட்டமொன்றினை ஆதர்சி கிளார்க்ஆய்வு நிறுவன உதவியோடு நாடளாவியரீதியில் மேற்கொள்வதற்கான முன் நடவடிக்கைகள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

புதிய கண்டுபிடிப்பு முயற்சிகளில் ஈடுபட்டுவரும் திறமையும் ஆர்வமும் உள்ள [illegible] திற்கு உட்பட்ட இளம் கண்டுபிடிப்பாளர்கள் இந்த நிறுவனத்தில் தம்மை பதிவு செய்து கொண்டபின் தம் புதிய கண்டுபிடிப்புக்களை சமர்ப்பித்துக் கொள்ள முடியும்.

நாடளாவியரீதியில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த ஆய்வு நிறுவனத்திற்கு நாட்டின் அனைத்து பாகங்களிலுள்ள இளம் கண்டுபிடிப்பாளர்கள் தமது கண்டுபிடிப்புக்களை அனுப்பிவைக்க முடியும்.

யாழ்ப்பாணத்திலுள்ள இளம் கண்டுபிடிப்பாளர்கள் இதுசம்பந்தமான மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்வதற்குயாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் சிவதட்சணாமூர்த்தியுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-14)

## வயல் விழா

(வடமராட்சி கிழக்கு)

அம்பன் விவசாய போதனாசிரியர் பிரிவில் விவசாய தொழில் நுட்ப வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சுயவிதை நெல்உற்பத்தியினை ஒட்டிய வயல்விழா குடத்தனை வயல் வெளியில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விழா யாழ். உதவி விவசாயப்பணிப்பாளர் ச.சின்னத்துரை தலைமையில் நடைபெறுகின்றது.

சிறப்புவிருந்தினராக மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப. வேலாயுதம் பிள்ளை கலந்து சிறப்பிக்கின்றார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-43)

## நியமனம்

(அல்லைப்பிட்டி)

யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நாராயண பிள்ளை. வைத்திலிங்கம் விசுவலிங்கம் நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ் மாவட்ட நீதிபதி ஆர். ரி. விக்கினராஜா முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இவர் நயினாதீவு 6ம்வட்டாரத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர் ஆவார். (க-46)

## கிராமிய கலைகள் போட்டி

(அல்லைப்பிட்டி)

இசை, நாடக, நாட்டுக்கூத்து, கிராமியக் கலைகளின் போட்டி நிகழ்வு எதிர்வரும் 12, 13, 19, 20 ஆம் திகதிகளில் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டினை பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழக செயலாளர் செ. மெற்றாஸ்மெயில் மேற்கொண்டு வருகிறார்.

## தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இளைஞர்களுக்குசைக்கிள்கள் அன்பளிப்பு

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அங்கத்தினருக்கு கப்பல் கட்டணத்துடன் மட்டும் புதிய துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி அண்மையில் பருத்தித்துறை தேசிய இளைஞர் சேவைகள் மன்றக்காரியாலயத்தில் நடைபெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட உதவி இயக்குநர் சிவதட்சணாமூர்த்தி பல்வேறு கழகங்களில் இருந்தும் தெரிவு செயப்பட்ட 40இளைஞர்கழக அங்கத்தினருக்கு துவிச்சக்கர வண்டிகளை அன்பளிப்புச் செய்தார். இவ்வாறு வழங்குவதற்கென மேலும் ஒரு தொகுதி துவிச்சக்கர வண்டிகள் வரவுள்ளதாக தெரியவருகிறது. (க-57)

## கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை இராணுவ அதிகாரி வெளியிட்டார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் கட்டுப்பாட்டு பிரதேசம் கட்டுப்பாடில்லாத பிரதேசம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட இராணுவத் தளபதி கேணல் சக்கி அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

இப்பகுதிகளை வேறுபடுத்தி தெளிவு படுத்துமாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க இவ்வரையறை மேற்கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

12 பிரதேச செயலர் பிரிவுகளைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 345 கிராம சேவகர் பிரிவில் 119 கிராம சேவகர் பிரிவுகள் படையினர் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசமாக அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் படையினரின்கட்டுப்பாட்டில் உள்ள, இல்லாத கிராம சேவையாளர் பிரிவும் வரையறை செய்து இடங்களின் பெயர்களும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிர்வாகசபை தெரிவு

பளை இளைஞர் சம்மேளனத்தின் ஸ்ரீபதி இளைஞர் கழக நிர்வாக சபை தெரிவு கடந்த முதலாந்திகதி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. நடப்பு ஆண்டின் புதிய தலைவராக செ. நிமலரூபன் செயலாளராக க.சபேசன், பொருலாளராக வ.புவியந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

கசிப்பு உற்பத்தியாளரும் அதனை அருந்துவோர் தொகையும் புத்தூர் வடக்கில் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கசிப்பின் விலை குறைவாக இருப்பதால் சாதாரண கூலித்தொழிலாளர்கள் கசிப்பை நாடுவது அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது.

அத்துடன் கசிப்பு அருந்துவோரால் வீடுகளிலும் வீதிகளிலும் பெரும் சிரமங்களை பொதுமக்கள் அனுபவித்து வருவதாகவும் தெரியவருகிறது.

இதுதொடர்பாக இப்பகுதி மக்களால் கோப்பாய்பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் புத்தூர் மக்கள் தொரிவித்துள்ளனர். (க-57)

## விதைநெல் உற்பத்தி இம்முறை யாழ்ப்பாணத்தில் பெருவெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில், விவசாய சேவைகள் திணைக்களமும், விவசாயத் திணைக்களமும் இணைந்து மேற்கொண்ட விதை நெல் உற்பத்தி முயற்சி வெற்றியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

13 விவசாய போதனாசிரியர் பிரிவிலுள்ள 30 ஹெக்டேயர் நிலப்பரப்பில் அதிக விளைச்சலைத் தரவல்ல நெல்லினங்கள் உற்பத்தி செய்யப்பட்டதில் நல்ல பலாபலன்கள் கிட்டியிருப்பதாக தெரியவருகின்றது.

உரிய நேரத்தில், பருவமழை வேண்டிய அளவில் இம்முறை கிடைத்ததாலேயே இம் முயற்சி வெற்றியளித்துள்ளதாகவும், இனி வரும் காலத்தில் விதை நெல் வேறு இடங்களில் இருந்து இறக்குமதி செய்யத் தேவை இல்லை எனவும் விவசாயத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (க-9)

## இராசி பலன்

07.02.2000, திங்கட்கிழமை
(தமிழுக்கு தை 24)

துவாதியை இரவு 9.04வரை சதயம் இரவு 12. 14வரை, சித்தயோகம் சந்திர தரிசனம் இராகுகாலம் காலை 8.35 முதல் 10.03வரை; சுபநேரம் பகல்1.05 முதல் 2.32 வரை,

**மேடம்:** அனாவசிய செலவு, பயண அனுகூலம், தற்பெருமை

**இடபம்:** தொழில் லாபம், பதவி உயர்வு, மனக்கோட்டை

**மிதுனம்:** வருமானக்குறைவு, தாழ்ந்தநிலை, வீண்வம்பு

**கடகம்:** மனக்கலக்கம், குடும்பசோகம், அலைச்சல்

**சிங்கம்:** கல்விச்சிறப்பு, வாக்குவான்மை, தெய்வதரிசனம்

**கன்னி:** விவாகச்செய்தி, நல்லோர் நட்பு, ஞானிகள்தரிசனம்

**துலாம்:** நலக்குறைவு, பந்துக்கள் பகை, மனச்சுமை

**விருச்சிகம்:** அதிகாரிகள் பாராட்டு, புத்திரர்சிறப்பு, தாய்அன்பு.

**தனுசு:** கடன்வேலை, தடுமாற்றம், காரியதடை

**மகரம்:** வேலைப்பளு, மனஅசதி, பழையநினைவுகள்

**கும்பம்:** நண்பர் கலகலப்பு, தியாக சிந்தை, புதியஉறவு

**மீனம்:** பெற்றோர்கவலை, பணிந்து போதல், வைத்தியசெலவு

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

## அக்கினி பெருமூச்சு

(நெடுந்தீவு)

காணாமற் போனவர்களின் உறவுகள் படும் அவலநிலையினைச் சித்தரிக்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நாளை மறுதினம் 9 ஆம் திகதி பி.ப. 3-30 மணிக்கு ''அக்கினிப் பெருமூச்சு'' என்னும் நாடகம் அரங்கேற உள்ளது.

இந்த நாடகம் யாழ். பல்கலைக்கழக நாடக அரங்கியல் இறுதியாண்டு மாணவன் தேவானந்தின் நெறியாழ்கையில் தயாரிக்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-82)


சிறி ராஜன் பான்சி ஹவுஸ்
நங்கையரின் மனம் கவரும்
★ அன்பளிப்புப் பொருட்கள்
★ அழகு சாதனப் பொருட்கள்
★ பாடசாலை (B)பாக் வகைகள்
★ பிரயாண (B)பாக் வகைகள்
நிதான விலையில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஸ்தாபனம்
சிறி ராஜன் பான்சி ஹவுஸ்
65, 66, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (கி-65)



கண்ணீர் அஞ்சலி
எமது நிறுவன இயக்குநர்
திரு. ந. ஜெயபாலசிங்கம்
அவர்களின் அன்புத் தாயார்
நடராஜா மனோன்மணி
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
பதிவாளர், விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.
யாழ்ப்பாண தொழில்நுட்ப நிறுவனம்
(J. T. I.)
52/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (00152)

# இலண்டன் புறப்படவிருந்த விமானத்தில் குண்டுபுரளி; விமான நிலையத்தில்பரபரப்பு

(கொழும்பு)

கொழும்பு விமான நிலையத்தில் அண்மையில் ஏற்பட்ட குண்டுப் புரளியால் இலண்டன் புறப்படவிருந்த சி. எல். 350 விமானம் 3 மணிநேரம் தாமதித்தே இலண்டன் புறப்பட்டது.

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்ற கொழும்பு கட்டு நாயக்கா விமான நிலையத்திலிருந்தும் மு.ப11.45மணிக்கு இலண்டன் புறப்படவிருந்த விமானத்தில் குண்டு பொருத்தப்பட்டிருப்பதாக வந்த அனாமதேய தொலைபேசி அழைப்பால் விமானநிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

தொலைபேசி தகவலைத் தொடர்ந்து, இலண்டன் பயணத்தை மேற்கொள்ளும் பொருட்டு விமானத்தில் அமர்ந்திருந்த 350 பயணிகளும் உடன் இறக்கப்பட்டு, விமானம் பூரண சோதனையிடப்பட்டது.

இருப்பினும் குண்டுவெடிப்பதற்கான எந்தவொரு தடயமும் அகப்படாததால் 3 மணி நேரம் கழித்து விமானம் தனது பயணத்தை ஆரம்பித்தது.

இதனால் 11. 45 இற்குப் பின் புறப்படவிருந்த சகல விமானங்களும் ஒரு மணி நேரம் தாமதித்தே தமது சேவையைத் தொடர்ந்ததாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (க-9)

கொசோவாவில்

# சேர்பியர்கள் வசிக்கும் பகுதிகளில் பெரும் வன்முறைகள் வெடித்தன

(லண்டன்)

கொசோவாவில்சேர்ப்பியர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் மெற்றோவிக்கா நகரில் வன்முறைகள் தலைதூக்கியிருப்பதை அடுத்து அங்குவாழ்த்து வந்த அல்பேர்னியர்களில் பெரும்தொகையினர் வெளியேறுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வன்முறைச் சம்பவங்களின் போது, அல்பேர்னியர்கள் பலர் கொல்லப்பட்டதுடன், 2 துருக்கியரும் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன் சேர்பியர் உள்ளிட்ட பெருமளவினர் இவ்வன்முறையில்சிக்கிக்காயமுற்றுள்ளனர்.

பாதுகாப்புக்கருதி கொசோவாவில் இருந்து வெளியேறிவரும் அல்பேர்னியக் குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும்வகையில் தற்காலிக தங்குமிடங்கள் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வன்முறைகளை அடக்கி, நிலைமையை வழமைக்குக் கொண்டுவரும் பணியில் நேட்டோவின் கீழுள்ள அமைதிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்தவருடம் யூன் மாதம் நேட்டோப் படைகள் குண்டு வீச்சுக்களை நிறுத்தி அமைதிப்படையை நிலை கொள்ளச் செய்தபின் ஏற்பட்டுள்ள மிக மோசமான கலவரம் இது என தெரிவிக்கப்படுகிறது. (க-9)

# அமெரிக்காவில் பரவும் புற்றுநோய் அணுக்கதிர் வீச்சே காரணமாம்

## நியூயோர்க் டைம்ஸ் தெரிவிப்பு

(நியூயோர்க்)

அணு ஆயுதக் கிடங்குகளில் ஏற்படும் கதிர் வீச்சுக்களால் புற்றுநோய் உள்ளிட்ட பல அபாயகரமான நோய்கள் பரவும் ஆபத்து நிலவுவதாக அமெரிக்காவிலிருந்து வெளியாகும் 'நியூயோர்க்டைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அப்பத்திரிக்கையில் -

இக் கதிர் வீச்சுக்களால் புற்றுநோய் உள்ளிட்ட நோய்களில் அவதிப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துள்ளதாக எரிசக்தித்துறை மற்றும் வெள்ளை மாளிகை அதிகாரிகள் தகவல் வெளியிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14 அமெரிக்க அணுஆயுதக் கிடங்குகளில் உள்ள தொழிலாளர்கள் பெருமளவினர் புற்றுநோயால் அவதிப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கு பெரிலியம் என்ற உலோகம் விநியோகம் செய்துவரும் கிடங்குத் தொழிலாளர்கள் பெரிலியம் வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் எரிசக்தித்துறை தெரிவித்துள்ளது.

இந்த உலோகத்தால் ஏற்படும் வியாதியை குணப்படுத்த முடியாதென்றும் அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் அபாயகரமான புற்றுநோய் போன்ற நோய்கள் பரவுவதை தடுக்கும் நடவடிக்கையில் அமெரிக்க அரசு முழு அளவில் ஈடுபட்டு வருகின்றதாயினும் இவ்வகையான நோய்களை முற்றிலும் கட்டுப்படுத்துவது சாத்தியமில்லை என்று விஞ்ஞானிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

கோயம்புத்தூர்

# வேளாண் பல்கலைக்கழகம் மீண்டும் நேற்றுமுதல் வழமைபோல் இயங்குகிறது

(புதுடில்லி)

தர்மபுரியில் வைத்து பஸ்சுடன் 3 பல்கலைக்கழக மாணவிகள் தீமூட்டி எரிக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து இயங்காதிருந்த கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக் கழகம் நேற்று முதல் மீண்டும் இயங்குகிறது.

செல்வி ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட உச்ச நீதிமன்றத்தீர்ப்பை அடுத்து தலைவிரித்தாடிய வன்முறைகளின் போது மேற்படி பல்கலைக்கழக மாணவியர் கொல்லப்பட்டனர்.

இந்நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வேளாண் பல்கலைக் கழக மாணவர்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டதைத் தொடர்ந்து 2நாட்களாக பல்கலைக் கழகம் இயங்காதிருந்தது.

இதனை அடுத்து நேற்று முன் தினம் மாலை தமிழக அமைச்சர் பழனிச்சாமி மாணவர்களுடன் நடாத்திய பேச்சுக்களில் தமிழக முதலமைச்சரை சந்தித்து மாணவர் பிரச்சனை குறித்து பேசுவதற்கு வழிவகைகள் ஏற்படுத்துவதாக உறுதிமொழி அளித்ததைத் தொடர்ந்து மாணவர் கிளர்ச்சி கைவிடபட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஆராய்ச்சிப்படிப்புமுதுலைகப் படிப்பு ஆகியவற்றை மேற்கொள்ளும் மாணவர்களுக்கான வகுப்புக்கள் நேற்று ஆரம்பமாகின. (க-9)

உலக வலம்

# 19 வயதில் 6 குழந்தைகளை பெற்றெடுத்த அமெரிக்கப் பெண்

அமெரிக்காவின் பால்ரிமோர் என்ற இடத்தைச் சேர்ந்த 19 வயதுப் பெண்ணொருவர் இரண்டாவது தடவையாகவும் 3 குழந்தைகளை பெற்றெடுத்துள்ளார்.

முதல் தடவையிலும் 3 குழந்தைகளை பெற்றெடுத்த இவர், 20 மாத இடைவெளியில் அடுத்த 3 குழந்தைகளுக்குத் தாயாகி இருப்பது விசனத்துடன் நோக்கப்படுகிறது.

இருதடவைகளில் மொத்தம் 6 குழந்தை பிரசவித்த மேற்படி பெண்ணின் கணவருக்கு 22 வயது எனவும், இவ்வாறு குறைந்த வயதில் கூடுதலான குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்கு, மேலைநாடுகளில் அதிகரித்துவரும் இனவிருத்திப் போதைப் பொருள் பயன்பாடே காரணமெனவும் வைத்தியத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (க-9)

சீனாவில் தடை செய்யப்பட்ட

# அமைப்பைச் சேர்ந்த 50 பேர் பொலிசாரால் கைதாகினர்

(பீஜிங்)

சீனாவில் தடை செய்யப்பட்ட பாலொங்கொங் என்ற ஆன்மீக அமைப்பைச் சேர்ந்த 50 உறுப்பினர்கள் சீனப்பொலிஸாரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சீனப் புதுவருடம் ஆரம்பிக்க இருந்த நேரத்தில் பீஜிங்கின் கியாலெங்மென் சதுக்கத்தில் பாலொங்கொங் ஆன்மீக அமைப்பினர் வரிசையாக நடந்து சென்றதாகவும்.

புதுவருட நிகழ்விற்காக நாட்டப்பட்டிருந்த செந்நிறப் பதாதைகளை அகற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

இதனைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட சீனப் பொலிஸார் பாலொங்கொங் அமைப்பினர் கொண்டு சென்ற பதாதைகளை பறித்து கிழித்தெறிந்து அவர்களை நிலத்தில் தள்ளி வீழ்த்தி அடித்து உதைத்ததாகவும் பின் அவர்களைக் கைது செய்துள்ளதாகவும் உத்தியோக பூர்வ செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் சீன அரசு மேற்படி அமைப்பினரை ஏற்கனவே தடை செய்துள்ளதோடு அவர்களது ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களைக் கைது செய்து நீண்டகாலமாக சிறையில் அடைத்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-9)

## ரயில் வண்டி தடம்புரண்டதில் 7 பேர் பலி

(பேர்லின்)

ஜேர்மனியில் இருந்து புறப்பட்ட ரயில் வண்டி ஒன்று தடம் புரண்டதில் 7 பேர் கொல்லப்பட்டனர்.

20 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகியதுடன் 250 பேர் சிறு காயங்களுக்கு உள்ளானதாக தெரிய வருகின்றது. [க-9]

# பாக்.சிறையில் உள்ளமீனவர் விரைவில் இந்தியா அழைத்துவரப்படுவர்

## -மீன்வளத்துறைஅமைச்சர்

பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விரைவில் விடுவித்து மும்பை அழைத்து வர இருப்பதாக இந்திய மீன்வளத்துறை அமைச்சர் ஜெனீபர் சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த 19 மீனவர்கள் கடலில் வழி மாறிச் சென்ற போது கடந்த வருடம் ஈரான் அவர்களைக் கைது செய்திருந்தது.

பின் பாகிஸ்தான் எல்லையில் அவர்கள் விடுவிக்கப்பட்ட போது பாகிஸ்தான் அரசு மீளவும் மீனவர்களைக் கைது செய்து கடந்த வருடம் ஆனி மாதம் தொட்டு சிறையில் வைத்துள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட குடும்பத்தினரின் கோரிக்கைகளை அடுத்து அவர்களை விரைவில் விடுதலை செய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# பாக் - ரயிலில் குண்டுவெடிப்பு 3 பேர் பலி; 25 பேர் படுகாயம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் ரயிலில் பயணிகள் பெட்டியில் பொருத்தப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததில் 3 பேர் கொல்லப்பட்டதுடன், 25 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கராச்சிக்கு வடக்கே 160 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் ஹைதராபாத் நகரில் இருந்து ரயில் புறப்பட்ட சிறிது நேர இடைவெளியில் இக் குண்டு வெடிப்பு இடம் பெற்றுள்ளது.

குண்டு வெடிப்பில் அகப்பட்டு காயமடைந்து வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்ற பலர் இன்னும் அபாய கட்டத்தினை தாண்டவில்லை எனவும், இதனால் பலியானோர் தொகை இன்னும் அதிகரிக்கும் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தை அடுத்து குண்டுவெடிப்பு நிகழ்ந்த இடத்தினை பாகிஸ்தான் இராணுவப் பொலிஸார் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததுடன் தீவிர சோதனை நடவக்கைகளில் இறங்கியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை பாகிஸ்தானில் கடந்த ஜனவரி மாதம் சந்தை ஒன்றில் குண்டு வெடிப்பில் 18 பொதுமக்கள் காயமடைந்தமை தெரிந்ததே. (க-9)

# இலங்கைத் தமிழருக்காக குரல் கொடுக்க தமிழகத்தவர் தயக்கம் காட்டுவது ஏன்?

## வை. கோபாலசாமி கேள்வி

(சென்னை)

இலங்கைத் தமிழருக்காகக் குரல் கொடுக்க இந்தியத்தமிழர்கள் தயங்குவதேன் இவ்வாறு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பிரமுகர் வை. கோபாலசாமி கேள்வி எழுப்பினார்.

சென்னையில் நடைபெற்ற முத்தமிழ் விழா ஒன்றில் 'விடியலை நோக்கி' என்ற தலைப்பில் பேசிய வை. கோ. மேலும் கூறியதாவது.

இலங்கையில் தமிழர் மண் ஆக்கிரமிக்கப்படுகிறது. கலாசாரம் அழிக்கப்படுகிறது, நூலகம் எரிக்கப்பட்டது, தமிழர்கள் அவர்களுக்காக குரல் கொடுக்க தயங்குகிறார்கள்.

உலகில் வாழும் அனைத்துத் தமிழர்களின் துயர் நீங்க வேண்டும். எப்போதுதான் விடியல் ஏற்படும் என்றார். அனைத்து தமிழ் மக்களின் துயர் நீங்கப்பட வேண்டும். அப்போது தான் தமிழ் மக்கள் வாழ்வில் விடிவு ஏற்படும் என்றார். (க-4)

# யாழ். கொழும்பு விமான சேவையில் மேலும் ஒருவிமானம் ஈடுபடும்?

## நிர்வாக உயர்மட்டம் ஆராய்வு

(கொழும்பு)

யாழ்—கொழும்பு சேவையில் புதிதாக ஒரு விமானம் ஈடுபடுத்தப்படுவது பற்றி சிவில் நிர்வாக வட்டாரங்கள் ஆராய்ந்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது யாழ்ப்பாண கொழும்பு விமான சேவை இரு தடவைகள் மட்டுமே நடைபெற்று வருகிறது.

அண்மையில் விமானப் பயணத்திற்கான தடையை விடுதலைப் புலிகள் நீக்கியதைத் தொடர்ந்து பெருந் தொகையான மக்கள்விமான பயணத்தை நாடியுள்ளதால் பெரும் நெருக்கடி நிலைமை தோன்றி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்தே மேலும் ஒரு விமான சேவை நடாத்துவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இதே வேளை தவிர்க்க முடியாத காரணங்களுக்காக கொழும்பு செல்வோருக்கென ஒவ்வொரு நாளும் விமானத்தில் 8 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றமை தெரிந்ததே. (க-9)

## சிறுபணியாளர் சங்கம் உதயம்

(யாழ்ப்பாணம்)

''யாழ் மாவட்ட சிறுபணியாளர்கள் சங்கம்'' என்னும் பெயரில் கடந்த மாதம் 23 ஆம் திகதி தொட்டு புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில்அரச திணைக்களங்களில் பணியாற்றும் சிறு பணியாளர்களின் நலன் கருதி அமைக்கப்பட்டுள்ளது.

இச் சங்கத்தின் நடப்பு வருட தலைவராக க.கிருஷ்ணமூர்த்தி, செயலாளர் ஆர்.புவனேந்திரன், பொருளாளர் வ. மயில்வாகனம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் நிர்வாக உறுப்பினர்களாகவும் 4 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-9)

## விஞ். சங்கத்திற்கு ரூபா 2 இலட்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான சங்கத்திற்கு தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கென இரண்டு இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

1999 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவால் இந் நிதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரச கூட்டுத்தாபன ஆட்சேர்ப்பில் இனவிகிதாசாரம் பேணுவதில்லை

**- யோசப் பரராசசிங்கம் எம். பி.**

(மட்டக்களப்பு)

அரசாங்க கூட்டுஸ்தாபனங்களுக்கானபோட்டிப்பரீட்சை மூலமான தெரிவுகளில் இன விகிதாசாரம் பேணப்படல் வேண்டும் என்பது கடந்த 1990 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டவொரு நிர்வாக அமைச்சின் சுற்று நிருபத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. நடைமுறையில் அவ்வாறு பின்பற்றப்படுவதில்லை.

மட்டு. மாவட்ட பாராளுமன்ற உப்றுபினரும், தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகருமான யோசப் பரராசசிங்கம் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்காவுக்கு அனுப்பிய பாக்ஸ் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

கடந்த ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற இலங்கை நிர்வாகச் சேவைக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் போது தமிழ்மொழி மூலம்தோற்றிய பரீட்சார்த்திகளில் எவரும் தெரிவு செய்யப்படவில்லை. மாறாக 47 சிங்களப் பரீட்சார்த்திகள் மட்டுமே தெரிவாகியுள்ளனர். எந்த ஒரு தமிழரோ அல்லது முஸ்லிமோ தெரிவுசெய்யப்படாதது தாங்கள் கடைப்பிடிக்கும் இனங்களுக்கு இடையிலான ஒருமைப்பாடு, சமவாய்ப்பு போன்ற கொள்கைகளுக்கு எதிர் மாறான செயலாகும்.

இதே போன்று சென்ற ஆண்டு (1999) நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவைக்கான திறந்த போட்டிப் பரீட்சையில் 151 சிங்களவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட போதிலும் தமிழர்கள் இருவர் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தனர் என்று ஏற்கனவே நான் தங்களுக்கு அனுப்பிய 12 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் தெரிவித்திருந்தேன்.

இதே போன்று 1993 ஆம், 1994 ஆம், 1996 ஆம், 1998 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இலங்கை கணக்காளர் சேவைக்கான திறந்த போட்டிப் பரீட்சைகளில் ஒவ்வொரு ஆண்டும் தலா ஒரு தமிழர் மட்டுமே தெரிவாகியிருந்தனர். 1998 ஆம்ஆண்டு நடைபெற்ற பரீட்சையில் 38 சிங்களவர்கள் தெரிவான போதிலும் இரண்டு தமிழர்கள் மட்டுமே தெரிவாகினர்.

இத் தெரிவுகள் இந் நாட்டின் சிறுபான்மை மக்களான தமிழ், முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப் பட்டு வரும் தெளிவானதிட்டமிட்ட பாரபட்சத்தையே வெளிப்படுத்துகின்றது.

1990 ஆண்டு சுற்று நிருபத்தின்படி 74 சத விகித சிங்களவர்களும், 12.7 சத விகித இலங்கைத் தமிழர்களும், 8 சத விகித முஸ்லிம்களும். 5.3 சத விகித இந்திய வம்சாவளி தமிழர்களும் தெரிவு செய்யப்படல் வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

எனினும் இந் நடைமுறை தங்கள் தலைமையின் கீழ் செயல்படும் அரசாங்கத்தால் பேணப் படுவதை தவிர்த்து முழுமையாக மீறப்பட்டே வருகின்றது. 1995 ஆம் ஆண்டிற்குப் பின்பு இன விகிதாசார அடிப்படையிலான ஆட்சேர்ப்பு நடைபெறவில்லை. இச் செயல் தாங்கள் கடைப்பிடிக்கும் இனங்களுக்கு இடையிலான ஒருமைப்பாடு, சமவாய்ப்பு போன்ற கொள்கைகளுக்கு எதிர் மாறாக அமைகின்றது.

எனவே அரச, கூட்டுஸ்தாபனங்களுக்கான போட்டிப் பரீட்சைகள் மூலம் ஆட்சேர்ப்பு தெரிவில் தாங்கள் கொண்டுவர உத்தேசித்துள்ள புதிய நடைமுறையை அமுல் படுத்தும் வரை ஏற்கனவே அமுலில் உள்ள 1990 ஆம் ஆண்டு பொதுநிர்வாக அமைச்சின் சுற்று நிருபத்தில் கூறியுள்ளபடி இன விகித அடிப்படையில் தெரிவுகள் நடைபெற வேண்டும் என்ற உத்தரவை அமுல் படுத்தும் படி தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். (க-101)

### இன்று பெரும்பாலானோர்

# மற்றவர்களை குறை கூறுவதில் தமது நேரத்தை செலவிடுகின்றனர்

## நூல் வெளியீட்டு விழாவில் கரவெட்டி பிர.செயலர் உரை

(தென்மராட்சி)

இன்றைக்கு எங்களில் எல்லோரும் மற்றவர்களிலே யுள்ள குறைகளைக் காண்பதிலேயே எங்களுடைய நேரத்தைச் செலவிட்டு வருகின்றோம். மற்றவர்கள் என்ன குறை விடுகின்றார்கள். தவறுகள் செய்கின்றார்கள் என்பதைப் பற்றித்தான் சிந்திக்கின்றோம். பார்க்கின்றோம். ஆனால் எம்மிடம் இருக்கும் குறைகள், தவறுகள் பற்றிப் பார்ப்பதேயில்லை. நாம் எப்படித் திருந்த வேண்டும். எப்படி வாழ வேண்டும் என்று பார்ப்பதேயில்லை. இத்தகைய நிலை ஆரோக்கியமானதல்ல. இதில் இருந்து நாம் மாறிக்கொள்ள வேண்டும். எமது சமய நெறிப் பிரகாரம் நாம் வாழல் வேண்டும். அப்போது தான் எமது சமயம் மேலும் வளர்ச்சி அடையும்.

இவ்வாறு கரவெட்டி பிரதேச செயலர் திரு. செ. ஸ்ரீநிவாசன் தொண்டமனாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தில் சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட யாழ. இந்து சமயப் பேரவையின் கௌரவ செயலாளர் திரு. சி. சக்திகிரீவன் யாத்த ''முருகன் புகழ்'' நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத் துறை தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஸ்ணன்தலைமையில் நடைபெற்ற இவ் வெளியீட்டு விழாவில் பிரதேச செயலர் தொடர்ந்து உரையாற்றும் போது.

நாம் எமது வாழ்வில் நல்லவராக வாழ வேண்டும். நாங்கள் எங்களுடைய குறைகளைத் திருத்திக்கொள்ள வேண்டும். நாம் வல்லவராக வாழ வேண்டும். எமது சமயத்தின் சிறப்பியல்புகளை மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்து சமயப் பேரவையின் செயலாளர் சக்திகிரீவனின் முருகன் புகழ் எனும் நூலினை எமது இளம் சந்ததியினர் தாமாக முன் வந்து படிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் ஆசியுரை வழங்கிய நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் தமது உரையில்; —

இன்று நவீன சாதனங்கள் வளர்ச்சி அடைந்துள்ள நிலையில் வேண்டாத. நடைமுறையில் பொருத்தப்பாடற்ற பாடல்கள் எல்லாம் வீடுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இளம் தலைமுறையினர் வேண்டாத விடயங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். இன்று பத்திரிகைகளை புரட்டினால் குழப்பம். வானொலியைத் திருப்பினால் குழப்பம். தொலைக்காட்சியைத் திருப்பினால் குழப்பம். இவ்வாறு எமது இளம்தலை முறையினர் இவ்வகைப்பட்ட குழப்பங்களால் மிகவும் பாதிக்கப் பட்டுவருகின்றனர். இந்த நிலையில் எமது இளைஞர்கள் சமய நெறியில் வழிநடத்தப்படல் வேண்டும். தவறினால் பெரும்அபாயம் ஏற்படக்கூடும் என்று கூறினார்.

இவ் வெளியீட்டுவிழாவில் யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையின் துணைத்தலைவரும், உடுவில் பிரதேச செயலருமான திரு. ஆ. மகாலிங்கம் தொடக்கவுரை நிகழ்த்துகையில்;இந்தஉலகத்திலே முதல் முதலாக எமது சமயம் தான் தத்துவத்தை விஞ்ஞானத்தை ஆக்கிக்கொடுத்தது. இந்த ஆன்மா ஏன் பிறந்தது, நாம் இறைவனை அடைய என்னசெய்யவேண்டும். இந்த உலகம் எதற்காக படைக்கப்பட்டது என்பதையெல்லாம் நாம்புரிந்து கொள்ள வேண்டும். எமது இந்துசமயப் பேரவை யாருக்கும் எதிரானதல்ல. எமது சமயத்தில் இருக்கின்ற உண்மைகளையும் தத்துவங்களையும் புரியாமல் எமதுமக்கள் இருக்கின்றனர். அவ்வாறு இருப்பவர்களுக்கு நாம் சமய உண்மைகளை எடுத்துக்கூற வேண்டும் எனக்குறிப்பிட்டார்.

பருத்தித்துறை பிரதேச செயலர் திரு.ஆ. சிவசாமி அங்கு உரையாற்றுகையில்—

இன்றைக்கு எமது பிரதேசத்தில் திருத்தலங்கள் அழிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றன. அத்தகைய திருத்தலங்கள் புனரமைக்கப்படல் வேண்டும். இன்று எமதுபிரதேசத்தில் இருக்கின்ற இளம் சந்ததியினர் நெறிதவறிய செயற்பாடுகளைச் செய்து வருகின்றனர். அவர்களை நாம் வழிபடுத்த வேண்டும் சமயரீதியில் ஆற்றல் படுத்த வேண்டும். எனக்கூறினார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் மெய்யியல்துறைத் தலைவர் பேராசிரியர் நா. ஞானக்குமாரன் வெளியீட்டுரையை நிகழ்த்தி நூலினை வெளியிட்டுவைத்தார். கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளரான கவிஞர். கல்வயல் வே.குமாரசுவாமி நூல்பற்றிய மதிப்பீட்டுரையை நிகழ்த்தினார்.

சைவகலை பண்பாட்டுப் பேரவையினர் செயலாளர் திரு.ந.அரியரத்தினம் நன்றியுரை கூறினார். (க-77)


# லிங்கன் ஸ்ரோர்ஸ்

இறக்குமதி செய்யப்பட்ட பிறந்ததின, திருமணவாழ்த்துமடல்கள் LAMINATING & FAX PAPER என்பன விற்பனைக்கு உண்டு.

லிங்கன் ஸ்ரோர்ஸ்
168, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-66) தொலைபேசி இல: 3368


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

நேமியில்: 21 — 03 — 1930



நிமலனடியில்: 08 — 01 — 2000

அமரர் திருமதி

**சரஸ்வதி பத்மநாதன்**

(ஓய்வு பெற்ற ஆசிரியை,
யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்)

அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி திருமதி சரஸ்வதி பத்மநாதன் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு, சகல வழிகளிலும் உதவிகள் பல புரிந்த, அனுதாபச் செய்திகள் அனுப்பிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது இல்லத்தில் இன்று (7- 2- 2000) திங்கட்கிழமை நடைபெறுகின்ற அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கணவன், மகள், சகோதரர்கள்.**

12, மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(கி-00150)

அன்பகத் தில்லா உயிர்
வாழ்க்கை வன்பாற் கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

- குறள்

# வலம்புரி

## சமாதானமும் சகோதரத்துவமும்.

யாழ். மாவட்டத்தின் முதன்மைப் பிரஜையின் அறை கூவல் அர்த்தமுள்ளதும் ஆழமானதுமாகும். ''ஐம்பத்திரண்டாவது சுதந்திர தின விழா நிகழும்புதிய நூற்றாண்டின் முதல் ஆண்டிலேயே நமது நாட்டில் நிரந்தர சமாதானமும், சகோதரத்துவமும் ஏற்பட்டு நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகளாக ஒற்றுமையாக வாழ வேண்டும்'' என்பது அரச அதிபர் சண்முகநாதனின் வேணவாவாகும்.

பிரதேசத்தின் மக்கள் நிர்வாகி; மக்கள் தொண்டனும் கூட, அவர்களின் இன்னலும் அவ்வப்போது இன்னல் துடைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் தடமும் உள்ளத்தை உசுப்பி உணர்வலையைத் தூண்டியிருக்கும். இத்தகைய உணர்வு தலைமைக் கதிரைக்கு இருந்தாக வேண்டும்.

''அக்கா அக்கா என்கிறாயே சுதந்திரமென்ன சுக்கா மிளகா'' என பாரதி தாசனார் பாடியது தமிழ் உள்ளங்களுக்குப் பரிச்சியமானது. சுதந்திரத்தின் பெருமை ஈடிணையற்றது. அந்த ஒன்றுக்காய் அவலப்பட்டு ஆக்கமிழந்து அரிய உயிர்களை விலையாக்கி, அங்கமிழந்து பங்கப்பட்டு ஏங்கும் பொது மக்களின் நிர்வாகத் தலைவனின் நெஞ்சிலே உதிக்க வேண்டிய கருத்துத்தான்.

சர்வமும் இன்ப மயமாக வேண்டுமானால் சிந்தனைத் தெளிவு, செயற்றிறன், ஒரு சார இயக்கமுறும் தன்மை இந்நாட்டிலே பரிணமிக்க வேண்டும். நெஞ்சார நினைப்புகள் உதிக்க வேண்டும். அவற்றின் உருவாக்கத்திற்கு உழைக்கவும் வேண்டும்.

இத்தகைய சிந்தனை ஓட்டம் அரச அதிபர் மட்டத்திலன்றிபல்வேறுபிரிவுகளிலும் புலரும் பெருமையுற்றிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. இன்று மக்கள் சமாதானத்தை நெஞ்சார வேண்டி நிற்கின்றனர். யாரொடும் பகை கொள்ளிலன் என்ற பின் போரொடுங்கும் என்பது கம்பன் கருத்துரை. பகைமையை வீட்டி கேண்மையை நாட்டில் சமாதானம் ஒளிரும். சுதந்திரம் அர்த்தமுள்ளதாக விளங்க அனைவரும் நன்றே செய்ய இன்றே முயல்வோம்.

- அன்புடன் ஆசிரியர்

# ஜீவர்களிடத்தில் அன்பும், சேவையும் செய்யுமிடத்து

# அவையாவும் சிவனையே சென்றடையும்

சுவாமி விவேகானந்தர் சிகாகோவில் நடைபெற்ற சர்வமதசபையில் இந்து சமயத்தின் பிரதிநிதியாகச்சென்றதை யாம் அனைவரும் அறிவோம். ஸ்ரீராம கிருஷ்ணருடைய திருவடியில் தான் பெற்ற நிர்விகர்ப்பசமாதியின் அனுபவத்தையே யாண்டும் பெற நினைத்தார். இதனை அறிந்த ஸ்ரீராம கிருஷ்ணர் அதனை முற்றிலும் விரும்பவில்லை. 'உலக மக்களின் நலனுக்காகப் பிறந்த நீ முதலில் அதனைச் செயல்படுத்துவாயாக' என்றார் ஸ்ரீராமகிருஷ்ணர் அந்தப்பணி நிறைவுற்றதும் சுவாமிவிவேகானந்தர் விரும்பிய அந்த ஏகாந்தநிலையை அவர் அடைவார். என்பது ஸ்ரீராமகிருஷ்ணரின் கருத்தாக இருந்தது,

ஒரு நாள் ஸ்ரீராமகிருஷ்ணர் முன்னிலையில் சுவாமி விவேகானந்தர்இருந்தசமயம் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவாயிலிருந்து 'ஜீவதயை ஜீவதயை' என்ற சொற்கள் வெளிவந்ததை சுவாமி விவேகானந்தர் அவதானித்தார். இதனைத் தெளிவாகஸ்ரீராம கிருஷ்ணர் சுவாமி விவேகானந்தருக்கு விளக்கிவைத்தார். ஒவ்வொரு ஜீவனும் சிவனே. மனிதன் தெய்வீகத்தன்மை வாய்ந்தவன் ஆகவே ஜீவர்களிடத்தில் அன்பும் சேவையும்செய்யுமிடத்து அவையாவும் சிவனையே சென்றடையும் என்பதேயாகும்.

> ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சரின் ஜன்ம தினம் இன்றாகும், இதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது. (ஆ-ர்)

இந்தியாவில் அக்காலத்தில் பல்லாயிரம் மக்கள் தாழ்த்தப்பட்ட நிலையிலும் கல்வி அறிவு சற்றேனும் இல்லாதவர்களாயும் மிகவும் ஏழ்மையான நிலையில் இருப்பதனை சுவாமி விவேகானந்தர் தனது கால்நடைப் பயணத்தின் போது அறிய வாய்ப்பு இருந்தது. கல்கத்தாவிலிருந்து தென்னகம் வரையும் இமயம் முதல் கன்னியாகுமரிவரையும் கால்நடையாகச் சென்ற நமது சுவாமிவிவேகானந்தர் மகாராஜாக்களின் அரண்மனையிலும், கூலித் தொழிலாளியின் குடிசையிலும் வாழ்ந்து சகலதையும் நேரில் கண்டு மனம் வெதும்பினார்.

அந்த சமயந்தில்தான் சிகாகோசர்வமத மகாநாட்டுக்கு இந்து சமயத்தின் பிரதிநிதியாகச் செல்லும்படி பலர் இவரை வற்புறுத்தி வேண்டினார்கள். சுவாமி விவேகானந்தர் மேலைநாடு செல்ல விரும்பியது முக்கியமாக அடிமைத் தளையில் உள்ள கோடானுகோடி மக்களின் கண்ணீரைத் துடைக்கும் தீவிர வேட்கையினாலாகும்.

சுவாமி விவேகானந்தரின் மனித நேயத்தை நாம் உணரக்கூடியதாக பல நிகழ்வுகள் உள. அதில் ஒன்று சிகாகோ சர்வமத சபையில் ஒரு நாள் அவர் பேசிய சொற்பொழிவின் தலையங்கம் இந்திய மக்களின் அவசிய தேவை—கோதுமைமா, இதுவே தான் தலையான தேவை என்றார். ஆத்மீகக் கருத்துக்கள் நிறைந்த இந்தியாவிற்குத் தேவையானது மக்களின் துயர் துடைப்பிற்கு வேண்டிய நிவாரணமே.

**சுவாமி சித்துருபானந்தஜி**

சுவாமி விவேகானந்தர் மேலை நாட்டில் தனது பிரசங்கங்களால் பலரைக் கவர்ந்தார். பின்பு அவர் தனது தாய் நாட்டிற்குத் திரும்பிய பொழுது ஏழைகளின் வாழ்வை உயர்த்த வேண்டும் என்ற கனவை வெற்றிகரமாகச் செயற்படுத்த பல ஆங்கிலேய அமெரிக்க சீடர்கள் சுவாமிஜியுடன் இந்தியாவுக்கு வந்து தம்மிடம் உள்ள சகல செல்வங்களையும்இப்பணிக்கு அர்ப்பணித்தனர்.

இன்று சுவாமி விவேகானந்தரின் செயல் திட்டத்துக்கு வடிவம் கொடுக்கும் இரண்டு பெரிய ஸ்தாபனங்கள் உண்டு. ஒன்று ஸ்ரீராம கிருஷ்ணமடம், மற்றையது ஸ்ரீராமகிருஷ்ண மிஷன், தவசீலர்கள் பலர் வீட்டைவிட்டு நீங்கி ராமகிருஷ்ணமடத்தில் சேர்ந்து தமது வாழ்வைத் தியாகம் செய்கின்றனர். இப்படித் தியாகம் செய்த துறவிகள் ராமகிருஷ்ண மிஷன் என்ற அமைப்பின் மூலம் கல்விப்பணி, மருத்துவப் பணி, நிவாரணப்பணி, பல நூல்களை அச்சிட்டு வெளியிடும்பணி என பல பணிகளைச் செம்கின்றனர்.

இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், ரஷ்யா, கனடா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின்பணி ஸ்திரமாகப் பரவிவிட்டது.

# ஊழ்வினைக்கு தண்டனை தருபவர் சனீஸ்வரன்

# கொடுப்பவனும் கெடுப்பவனும் அவனே

புவியெல்லாம் போற்றும் இந்தப் புத்தாயிரம் ஆண்டில் அகில உலகத்தையுமே ஆட்டிப் படைத்து நீதி வழங்கும் உயர் நீதிபதியாகிய சனீஸ்வரனை பற்றி உங்களுக்கு ஒருசிலவற்றை அறியத் தருவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். கண்ணிருந்தும் குருடர் போல் சில மக்கள் சனீஸ்வரன் மகிமையறியாது அதனை மிகவும் இழிவு படுத்துவது யாமறிந்ததே. அந்த அறியாமை இக்கட்டுரையைப் படித்ததும் யாவரதுமனதில் நின்றும் மறைந்து விடும் என்று மிகவும் நம்புகிறேன்.

''உப்பில்லா பண்டம் குப்பையிலே'' என்பார்கள் உணவுக்கு உப்பு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் மனித வாழ்க்கைக்கு சனீஸ்வரன், ஒருவர் வாழ்வில் சனி திசையென்றோ, சனி புத்தியென்றோ, சனி சித்திரமென்றோ, அந்தரம் சூட்சுமமென்றோ, கால சக்கர திசையாகவோ, கண்டக சனியாகவோ, ஏழரைச் சனியாகவோ, அட்டமத்துச் சனியாகவோ சனீஸ்வரன் பரந்து, விரிந்து, ஊறி, தேறி நிறைந்து காணப்படுவது கண்கூடு. எந்த ஒரு மனிதனையும்அணுவளவும் பிசகாது ஆக்கிரமிக்கும் தன்மை கிரகங்களுள் சனீஸ்வரனால் மட்டுமே முடியும்.

கிரக கூட்டங்களுக்குள் கருநீல வர்ணத்துடன் அதிக உயரத்தில் காணப்படும் கிரகமாய் உள்ளது, இச் சனிக்கிரகம், இது செய்யும் பல்வேறு விகற்ப தொழில்களாலும் ஆட்சி உச்ச நீச பங்க நிலைகளாலும் இதற்கு மறு பெயர்களாகக் கதிர் மகன், காரி, மந்தன், கரியவன், சௌரி, மேற்கோள், முதுமகன், பங்கு, நீலன், முடவன், கலி, நோய்முகன், பாவநாயகன், விதிரூபன், நீலவர்ணன், நித்யன், சணைச்சரன், நொண்டி, ஜடாதரன், சாயாபுத்திரன் இப்படியாக 108 காரணப் பெயர்களைப் பெற்று விளங்குகிறது இக்கிரகம்.

சனீஸ்வரன் சூரிய பகவானுக்கும் சாயாதேவிக்கும் பிறந்தவன். பிள்ளை பிறந்த சேதி கேட்டு சூரிய பகவான் தன் தேர்ப்பாகன் சுதனுடன்

**( வளவன் )**

தன் மகனைப் பார்க்க வந்தக்கால் அவனை அப்பிள்ளையைப் பார்த்த கணமேகுஷ்டரோகம் பிடித்துக் கொண்டது. தோப்பாகன் சுதனுக்கு கால் முடமாகி விட்டது. இதைப் பொறுக்க முடியாத சூரியன் இதைத் தூக்கி வீசியே விட்டானாம் பெற்ற தகப்பனைக் கூட சனி விட்டு வைப்பதில்லை எவராயிருந்தாலும் தன் கடமை புரிவதில் உலகிலே சனிக்கு நிகரான எந்தக் கிரகமும் இல்லை. இதனால் தான் சூரியனுக்கும் சனிக்கும் அதாவது தகப்பனுக்கும் மகனுக்கும் பிறவிப்பகை ஏற்பட்டது. சூரிய திசையில் சனிபுத்தி, சனிதிசையில் சூரிய புத்தியை நேரில் அனுபவித்தவர்களுக்கு இது நன்கு விளங்கும்.

சனி ஒருசிவபக்தன். கடும் தவவலிமையாலேயே சனீஸ்வரன் என்ற பெயரை இவன் சிவனிடம் இருந்து பெற்றான். இந்த ஈஸ்வரன் பட்டம் இலகுவில் யாருக்கும் கிடைக்காத ஒரு பட்டமாகும். இந்திர பட்டம் ஒரு கால் பெற்றாலும் ஈஸ்வரன் பட்டம் கடும் தவவலிமையாலே பெற முடியும். சகல உலகத்திலும் நீதியை நிலைநாட்ட வேண்டி சனி கடும் தவமிருந்து சிவனிடம்இருந்து பெற்றேன். கிரகங்களுக்குள் ஈஸ்வரன் பட்டம் எடுத்தது சனி ஒன்றேயாகும். மற்றும் அசுரர்களுள் இப்பட்டம் இலங்காபுரி மன்னன் இராவணன் தன் கடும் தவத்தால் சிவனிடமிருந்து பெற்று இராவணேஸ்வரன் ஆனான்.

உலகிலே இந்த ஈஸ்வரன் பட்டம் எடுத்தவர்கள் சனீஸ்வரனும், இராவணனும் என்பது குறிப்பிடத்தக்கது. இராவணன் சில இடங்களில் கொடியவனாய் வர்ணிக்கப் பட்டாலும் அவன் ஒரு சிறந்த ஞானி, சிவபக்தன் அவனது பக்தி பலத்திற்குச் சிவன் ஒரு வாளையும் பரிசளித்தார் என்றால் வேறு என்ன வேண்டும். எது எப்படியிருப்பினும் அவன் பக்தி களங்கமற்றது. இது நிற்க!

சனீஸ்வரனின் தொழில் என்ன? குணாதிசயங்கள் என்ன என்று பார்ப்போம். பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் இப்பஞ்ச பூதங்களுக்கும் அதிபதி இவன் தான். இக்கிரகத்தை விதிகாரன், ஆயுட்காரகன் என்று பலவாறாக அழைக்கிறோம். அத்தோடு நம் உடலில் நரம்பு மண்டலத்தைக் கட்டுப்படுத்துகிறது. இதன் தெய்வம் யமதர்மராஜனாக உள்ளார். இதனால் தான் ஒருவன் ஜாதகத்தில் ஆயுளையும் இவனைக் கொண்டு கணிக்கிறோம், திசையில் மேற்குத் திசையையும், சரீர அமைப்பில் நரம்பு மண்டலத்தையும், பாவத்தில் துயரத்தையும், நவதானியத்தில் எள்ளையும், நவ உலோகங்களில் இரும்பையும், நவரத்தினங்களில் நீலத்தையும் குறிக்கிறது. நவக்கிரகங்களுக்கும் நவதானியம், நவலோகம், நவரத்தினம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

]அடுத்த ஞாயிறு தொடரும்]

## இன்று 50 வது ஒலி:
## "வலம்புரியே வாழ்க பல்லாண்டு"

நலம்புரி நோக்கில் நாளும்
நிகழ் புதினங்கள் தாங்கி
வலம்வரும் இதழே! நடையில்
வீறினைக் காட்டி மக்கள்
பலத்துடன் பல்லாண்டு இங்கே
புகழுடன் பணிகள் செய்தே
வலம்புரி வாழ்க! நாதம்
விளங்கிட இதயம் எல்லாம்!

— நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

## கிழக்கு பல்கலைக்கழகத்தின்
# புதிய உபவேந்தராக பேராசிரியர் மூக்கையா நியமிக்கப்பட்டுள்ளார்

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தின் 4 வது உபவேந்தராகபேராசிரியர் மூக்கையா இன்று திங்கட்கிழமை பதவி ஏற்கவுள்ளார்.

இவர் பேராதனைப் பல்கலைக்கழக புவியற்றுறைப் பேராசிரியராகவும் வடமாகாண பல்கலைக்கழகக் கல்லூரிப் பணிபாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

1998 நவம்பருடன் துணை வேந்தராக இருந்த பேராசிரியர் இராஜேந்திரத்தின் பதவிக்காலம் முடிவடைந்ததில் இருந்துஇன்றுவரை பதில் உப வேந்தர் ஒருவரேகிழக்கிலங்கைப்பல்கலைக்கழகத்திற்குப் பொறுப்பாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### சாரதியும்...

தருணகயில்.

பஸ்வண்டிகளில் இடம் பெறும் குண்டு வெடிப்புகளினால் பெரிதும் பாதிக்கப் படுபவர்கள் அப்பாவிப் பெதுமக்களே. பொதுமக்களை நாம் கட்டாயமாக பாதுகாக்கவேண்டும். என்று கூறிய பிரதிப்பொலிஸ்மா அதிபர் பஸ் குண்டுவெடிப்புக் களுக்கு பஸ் சாரதிகளும் நடத்துநர்களுமே முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் அதற்கு அவர்களின் கவனயீனமே காரணம் என்றும் தெரிவித்தார்.

உறுகொடவத்த, குருநாகல், கடவத்தை ஆகிய இடங்களில் சுதந்திரதினத்திற்கு முதல் நாள் குண்டுகள் வெடித்து 35 பேர்களை காயப்படுத்தியது தெரிந்ததே. (வ)

### வட - கிழக்கு...

நகர எம். பி. என். செல்வராசா, எம். பி. யாழ். மதகுரு சபை உறுப்பினர்கள் அர்விந்தன், தனேந்திரன், மற்றும் முகுந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நாளை 8ம் திகதி ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று இரா. சம்பந்தன், எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி ஆகியோர் கலந்துகொள்கிறார்கள். (வ)

### மட்டக்களப்பு...

திடீர் மரணவிசாரணை அதிகாரி கே. பட்டித் பெர்னான்டோ, கட்டிட ஒப்பந்தகாரர் கே.. ராஜா, கே. கதிர்காமபோடி ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் மீதான விசாரணையை பொலிஸ் இன்ஸ்பெக்டர் வி. எம். டி. ஹமீத் தலைமையிலான குழு ஒன்று மோற்கொண்டுள்ளது. (வ)

### கூட்டணி...

வில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மாவை சேனதிராசா வவுனியாவில் உள்ள உறவினர் ஒருவரின் மரணவீட்டிற்கு சென்றதினால் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை எனவும் யோசப்பரராசசிங்கம் கூட்டத்தைப் பகிஷ்கரித்ததாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

★★★★★★★★★★★★★★★★
★ திருமண நல்வாழ்த்துக்கள் ★
★★★★★★★★★★★★★★★★

இல்லறம் என்னும் நல்லறத்தில் இணையும்

திரு. தி. வேல்நம்பி

(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

திருமதி வே. சஜிதா

தம்பதிகள் பல்வகைச் செல்வமும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

அன்புடன்
நண்பர்கள்

# ஓயாதஅலைகள் 3 நான்கு புலிகள் உயிரிழப்பு

ஓயாத அலைகள் - 3 நடவடிக்கையில் தமது தரப்பில் மூவர் உயிரிழந்துள்ளதாகவும் திருமலை கடலில் பயிற்சியின் போது ஒருவர் உயிரிழந்ததாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

★ வீரவேங்கைகளான முற்றமார் (செல்வராஜன் தவநேசன்) யாழ்ப்பாணம்.

★ அறிவு வேங்கை (டேவிட் சிறிகாந்தன்)யாழ்ப்பாணம்.

★ ரவீந்திரன் (கஜரூபன் வல்லிபுரன்) யாழ்ப்பாணம்.

★ கடற் கரும்புலி (மேஜர் ரூபன் (சீனிவாசன் சிவாநந்தன்) மட்டக்களப்பு.

### மீனவர்களின்...

அடுத்து இன்று மீனவசங்கங்கள் ஒன்றிணைந்து நடத்தும் பேரணிக்கு ரெலோ அமைப்பு ஆதரவு தெரிவித்துள்ள தோடு பங்கு கொள்ள உள்ளது.

வெறுமனே யுத்தத்தைக் காரணம் காட்டி மீனவர்களின் வயிற்றில் அடிப்பதும் தமிழர்களை மூன்றாந்தர பிரஜைகளாக கணிப்பதிலும் அரசு தீவிரம் காட்டுவது புதிதல்ல. இருந்தும் யாழ் குடாநாட்டு மக்கள் பொருளாதாரத் தடைகளின் விளைவாகப் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி நிற்கும் இத் தருணத்தில் மீன்பிடித் தடையையும் தளர்த்தாமல் அரசு இறுக்கி வைத்திருப்பதை நாம் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏற்கனவே மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக நாம் ஜனாதிபதிக்கு அறிவித்திருக்கிறோம். ஆனால் அரசு இதில் பாரபட்சம் காட்டி பாராமுகமாய் இருப்பதையிட்டு நாம் அச்சம் கொள்ள வேண்டியுள்ளது.

இன்று நடைபெறவிருக்கும் மீனவர்களின் எழுச்சி மிகு சாத்வீக போராட்டத்துக்கு பொது நிறுவனப் பிரதிநிதிகள், தொண்டர்ஸ்தாபனங்கள் அரச ஊழியர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கி மீனவர்களின் கோரிக்கைகள் நிறைவேற அரசை நிர்ப்பந்திக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம் என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

# துவிச்சக்கரவண்டி பயணிகளுக்கு பிரதேசசபைத் தலைவர் அறிவுறுத்து

வீதி ஒழுங்கு முறைகளை நாம் சரிவர அறிந்து பின்பற்றாமையினால் பல கஷ்டங்களை வீதிப்போக்குவரத்தின் போது நாம் எதிர் நோக்கவேண்டியுள்ளது.

ஈ. பி. டி. பி அமைப்பைச் சேர்ந்த வலிகிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூதன் குணசிங்கம் துவிச்சக்கர வண்டிப் பயணிகளுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

அவ்வேண்டுகோளில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

வேலை நேரங்களில் கடமைகளை முடித்துக்கொண்டு வீடு செல்லும் போது இளைஞர் யுவதிகள் நால்வர் ஐவராக செல்வது பிறபயணிகளுக்கு துன்பத்தை இடைஞ்சலைக் கொடுக்கிறது. அவசர சிகிச்சைக்காகஅம்புலன்ஸ் வண்டிகள் கூட தமது பணியைச் சிறப்பாக செய்ய முடிவதில்லை.

வீதி ஒழுங்கு முறைகள் பிறபிரதேசங்களில் கடைப் பிடிக்க வேண்டுமென பொலீஸார் கண்காணிப்பர்ஆனால் எங்கள் பிரதேசத்தில் நாமே ஒழுங்காக நடந்து மக்களுக்கு தொல்லை தராது ஒருவர் பின் ஒருவராக செல்லும் நிலையை உருவாக்கவேண்டும்.

பிரதேச நன்மை கருதி மேலே கூறிய விதிகளை அனுசரித்து நடக்கவும் பாடசாலைகள் மாணவர்க்கு இது விடயத்தை அறிவுறுத்துவது வரவேற்கத்தக்கது. என்று அவர் கூறினார்.

### த. வி. கூ.

★ வன்னிக்கான உணவு. மற்றும் மருந்துப் பொருட்களைத்தாராளமாக அனுப்பி வைக்க வேண்டும்.

★ கொழும்புக்கும், யாழ் பாணத்திற்குமான போக்கு வரத்தில் ஏற்படும் சீர்கேடுகளை நிவர்த்திசெய்து சீரான போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

★ யாழ். குடாநாட்டில் உள்ள கடற்றொழிலாளர் மீன்பிடிப்பதற்கு வசதியாக மீன் பிடித்தலுக்கு விதிக்கப் பட்டுள்ள தடைகளை நீக்க வேண்டும்.

★ கொழும்பில் அடிக்கடி இடம்பெறும் சுற்றிவளைப் புக்கள், தேடுதல்வேட்டை ஆகியவற்றின் போது கண்டபடி கைது செய்வது நிறுத் தப்பட வேண்டும்.

★ வேலை வாய்ப்புகளினால் தமிழர் புறக்கணிக்கப் படுவது சம்பந்தமாகவும், விரைவில் ஜனாதிபதியைச் சந்தித்து வலியுறுத்திக் கூற வுள்ளனர்.

இரா. சம்பந்தன் எம்.பி., ஆனந்தசங்கரி ஆகியோர் ஜனாதிபதியை இன்று சந்தித்துப் பேசவுள்ளனர். (வ)

# வடமராட்சியில் குமாருக்குச் சிலை

(புலோலி)

வடமராட்சியில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் பிரபல சட்டத்தரணியுமான அமரர் குமார்பொன்னம்பலத்திற்கு சிலை நிறுவப் படவுள்ளது.

இதற்கான நிதிஉதவிகளை வழங்க வடமராட்சியில் உள்ள அமரர் குமார்பொன்னம்பலத்தின் ஆர்வலர்கள் முன்வந்துள்ளனர். வடமராட்சியின் முக்கிய இடமொன்றில் இச்சிலை அமைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (52)

# புதிய எம். பியாக செயகுஇசத்தீன்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் எம்பியாக செயகு இசத்தீன் நியமிக்கப் பட்டுள்ளார்.

நாளை மறுதினம் சபாநாயகர் முன்னிலையில் பதவி ஏற்கவுள்ள இவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில்இருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.,

### 10 ஆயிரம்...

ஒன்றில் இந்தியாவில் இருந்து இலங்கை வந்த சுமார் 5ஆயிரம் குடும்பங்கள் இங்கு தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### 15 ஆயிரம்...

கொண்டதுடன் இனப்பிரச்சினைத்தீர்வுக்குபேச்சுவார்த்தை நடைபெறவிருக்கும் இவ்வேளையில் இராணுவத்தினரின் பலத்தையும் அதிகரிக்கவேண்டியுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

உ

மங்களகரமான திறப்பு விழா



நகுலேஸ்வரி தொலைத் தொடர்பகம்

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

வடமராட்சி, கிழக்கு. அம்பன் குடத்தனை

07 . 02 . 2000 திங்கள் நண்பகல் 12.00 மணி முதல் 2.00 மணி வரையுள்ள சுபவேளையில் மேற்படி தொலைத் தொடர்பு சேவையை ஆரம்பிக்க உள்ளோம்.



உள்ளூர் இலக்கம்: 070 - 213002 சர்வதேச இலக்கம்: 0094 - 70213002

உற்றார், உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்றையதினம் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

ராஜன் எலக்றிக்கல்,
பிரதான வீதி, பருத்தித்துறை.
நகுலேஸ்வரி அரைக்கும் ஆலை,
வடமராட்சி கிழக்கு, அம்பன், குடத்தனை.

மு. நகுலராசா
பா. கிரிதா குடும்பத்தினர்.

(கி/60)